FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

808820

C

1. District : பெரம்பலூர் PS: உ.கு.க.த. பிரிவு Year: 2026 FIR No.: 01 Date: 08.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7 & 12
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 07.07.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 08.07.2026 Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினியில் தட்டச்சு செய்யப்படுள்ளது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகம் 30.கி.மீ., கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் :

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.கோ. கோபிநாத் (b) Father's/ Husband's Name : கோவிந்தராஜ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 20.02.1988 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : முதுநிலை உதவியாளர் (g) Address : மாவட்ட ஆட்சியரகம், பெரம்பலூர் மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்படுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்படுள்ளது -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

09-7-2026 (இரா. இளையராஜா)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: : 09.07.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் V.AYSWARYA
Rank: நிலை INSPECTOR ..No. எண் .....
V&Ac, PERAMBALUR.

கனம் மாவட்ட அமர்வு நீதிபதி / சிறப்பு நீதிபதி பெரம்பலூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கபடுகிறது:

பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 01/2026-ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 07-ன் தொடர்ச்சி

1) திரு.R.ஈஸ்வரன், த/பெ ராமசாமி, சார் பதிவாளர்(பொறுப்பு), இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், குன்னம் தாலுக்கா, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்.
2) திரு.M.கண்ணன் (Stamp Vendor), த/பெ முருகேசன், புதுவேட்டக்குடி ரோடு, குன்னம் தாலுக்கா வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம். (அம்மன் ஜெராக்ஸ் கடை உரிமையாளர்)
3) திரு.தங்கராஜ், ஆவண எழுத்தர்
4) திரு.குமார், ஆவண எழுத்தர்
5) திரு.சுப்ரமணியன், ஆவண எழுத்தர்
6) திரு.தாட்ஸ்மேன் பெருமாள், ஆவண எழுத்தர்

பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 01/2026-ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி

பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய திருமதி.V.ஐஸ்வர்யா ஆகிய நான் 08.07.2026 ஆம் தேதி பணியில் இருந்தபோது பிற்பகல் 15.00 மணிக்கு திரு.கோ.கோபிநாத், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், பெரம்பலூர் மாவட்டம் என்பவர் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தாலுக்கா வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்ற திடீர் சோதனை செயல்முறைகளின் படி நடவடிக்கை எடுக்குமாறு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினன பெற்று ரகசிய தகவல் மேற்கொண்டும் சட்ட வல்லுநர்களின் ஆலேசனை பெற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் துறை இயக்குநரக உத்திரவின் பேரில் வழக்கு பதிவு செய்யபடுகிறது அனுப்பநர்: கோ.கோபிநாத், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், பெரம்பலூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, பெரம்பலூர்.அம்மா, பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்க பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வாளர் அகிய நான் தற்காலிக ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்டு அதன் செயல்முறை ந.க.அ1/136/2026 நாள்:

07.07.2026-ன் அடிப்படையில் ஊ.த.க பெரம்பலூர் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஐஸ்வர்யா மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் கடந்த 07.07.2026-ம் தேதி சுமார் 18.00 மணிக்கு வேப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு

வேப்பூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் (பொறுப்பு)-ஆக பணியாற்றி வரும் திரு.ஈஸ்வரன் என்பவர் தனது அலுவலக பணியை செய்வதற்காக பத்திரபதிவு செய்ய வரும் பொது மக்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்று அதனை தனது அலுவலகத்திற்கு வெளியே சுமார் 10 மீட்டர் தூரத்தில் இருக்கும் அம்மன் ஜெராக்ஸ் என்ற பெயர் கொண்ட கடையினை நடத்தி வரும் திரு.கண்ணன் என்பவரிடம் கொடுக்க சொல்லியிருந்ததையடுத்து அடிப்படையில் மேற்படி கண்ணன் என்பவர் அவரது கடையான அம்மன் ஜெராக்ஸ் கடையில் பத்திர எழுத்தர்கள் கொடுக்கும் கையூட்டு பணத்தை பாதுகாப்பாக வைத்திருந்து சார் பதிவாளர் சொல்லும் நேரத்தில், அவர் சொல்லும் இடத்தில் கொண்டு மொத்தமாக சேகரிக்கப்பட்ட கையூட்டு பணத்தை சார் பதிவாளரிம் ஒப்படைப்பதை வழக்கமாக கொண்டுள்ளார் என்று பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 07.07.2026-ம் தேதி சுமார் 18.00 மணியளவில் பெரம்பலூர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட நான் காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் வேப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தேன்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தாலுக்காவில் உள்ள வேப்பூர் சார்பதிவாளர் அலுவலகமானது வேப்பூர் TO ஓலைப்பாடி புராதான சாலையின் இடது புறத்தில் கிழக்கே அமைந்துள்ளது. மேலும் புராதான சாலையின் இடது புறத்தில் கான்கரேட் சிமெண்ட் சாலையின் சுமார் 20 மீட்டர் தூரத்தில் அலுவலகமானது முதல் மாடியுடன் கொண்ட கான்கரேட் கட்டிடமாக அமைந்துள்ளது. மேலும் அலுவலகமானது வட மேற்கு நோக்கி வாசல் கொண்டதாகவும், வாசலின் கிழக்கே மூன்று கழிவறைகளும் அதன் அருகே முதல் மாடி செல்லும் படிக்கட்டுகளும் அதன் கீழே இடங்களில் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது. முதல் மாடியில் வலது புறத்தில் கழிவறையும் அதன் எதிரே ஒரு இரும்பு பீரோவும், மேலும் அத்தளத்தில் மூன்று கண்ணாடி அறைகள் கொண்டாதாவும், அதில் இரண்டு பூட்டிய நிலையில் பதிவேடுகள் கொண்ட அறைகளாக அமைந்துள்ளது. மேலும் ஒரு அறை தாழ்பாழ் போடபட்டு அதில்

பதிவேடுகள் அடுக்கப்பட்டு காணப்பட்டது. மேலும் வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தின் தரை தளத்தில் நுழைவு வாயிலில் வராண்டாவும் அதிலிருந்து மேற்கு பகுதியில் இளநிலை உதவியாளர், Data Entry Operator, ஆகியோர் இருக்கைகள் வலது புறத்திலும் அமைந்துள்ளது. மேலும் சார் பதிவாளர் இருக்கையானது வாயிலின் எதிரே கிழக்கு பார்த்தவாறு இருக்கையுடன் கூடிய டேபுளுடன் அமைந்துள்ளது. சார் பதிவாளரின் வலது பக்கத்தில் மரகதவு மற்றும் மர அலமாறி மற்றும் இரும்பு பீரோ ஆகியவற்றில் பதிவேடுகள் அமைந்துள்ளது. அதன் தென்மேற்கே பெரிய கண்ணாடி அறை தடுப்புகள் அட்டைகளால் அடைக்கப்பட்டு கணினி அறையானது அமைந்துள்ளது. அவ்வறையில் மூன்று கணினியுடன் கூடிய டேபுளும் அதல் இரும்பு மற்றும் மர பீரோக்கள் கிழக்கு பார்த்தவாறும் அதில் ஐன்னலில் VOLTAS WINDOW AC அமைந்துள்ளது. அவ்வறையில் உள்ளே கேமரா இயக்கும் Control Panel அறை அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் அனைத்து இடங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

திடீர் சோதனையின் போது அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்கள்/தனி நபர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். சோதனையின் போது 1) திரு R.ஈஸ்வரன் 32/26, சார் பதிவாளர்(பொறுப்பு), இளநிலை உதவியாளர், வேப்பூர். ரூபாய்-500-ம் 2) P.சூரியா 26/26, இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம்,வேப்பூர். ரூபாய்-60-ம் 3) C.கோகுல் 29/26,தற்காலிக கணினி ஆப்ரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், வேப்பூர், ரூபாய்-200-ம் 4) A.கீதா, 43/26, டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், வேப்பூர். ரூபாய்-350-ம் கையிருப்பு பணம் இருந்தது. தனிநபர்கள் 1) வேல்முருகன் 42/26,த/பெ பரமசிவம், வ.உ.சி நகர், செல்லியம்மன் கோவில் தெரு, தண்டையார் பேட்டை,சென்னை - 81. ரூபாய்-2,500-ம் 2) இளையராஜா 35/26, த/பெ துரைசாமி, 3/24 நடுத்தெரு, துங்கபுரம், குன்னம் தாலுகா ,பெரம்பலூர். ரூபாய்-2,100-ம் கையிருப்பு பணமாக வைத்திருந்தார்கள்.

மேலும் மேற்படி பணியாளர்/தனி நபர்களால் அவர்கள் வைத்திருந்த பணத்திற்க்கு உரிய மூகந்திரம் கூறப்பட்டதால் தத்தமது பணம் அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.

மேலும் சார் பதிவாளர் (பொறுப்பு) அவர்களை விசாரித்தின் தொடர்ச்சியாக அவரையும் உடன் அழைத்து சென்று மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் வெளியே சுமார் 10 மீட்டர் தொலைவில் இருக்கும் அம்மன் ஜெராக்ஸ் கடையை அக்கடையின் உரிமையாளர் திரு.கண்ணன், 50/26, த/பெ முருகேசன், அம்மன் ஜெராக்ஸ் கடை (stamp vendor) உரிமையாளர், மற்றும் என் முன்னிலையில் சோதனை செய்த போது அவரது கடையில் இருந்த இரும்பு டேபுளில் 06.07.26

என்று பென்சிலால் தேதி எழுதப்பட்ட கத்தையாக பணத்துடன் 18.3 நீளம் x 10.3 அகலம் அளவு கொண்ட காக்கி கவரும் மேலும் 07.07.26 என்று பென்சிலால் தேதி எழுதப்பட்டு ஊதா நிற பேனாவால் Kumar - 6, V.T. - 24, SV.Subramaniyan - 6, Kannan - 50, தாட்ஸ் - 5.50 ஆக கூடுதல் 50.50-, கவரின் பின் பக்கத்தில் DGP - 1 party -, காடூர் 1 x 10, ஜீ.பெ 2x3 6, துங்க 1x5 5, வ.ஜா 1 3 3 ஆக கூடுதல் 24 என எழுதப்பட்ட 24.8 நீளம் x 9.8 அகலம் கொண்ட மற்றொரு காக்கி கவருமாக மொத்தம் இரண்டு காக்கி கவர்கள் கண்டறியப்பட்டது. அதனை பற்றி கடையின் உரிமையாளர் திரு.கண்ணன் என்பவரிடம் விசாரணை செய்த போது அவர் மேற்படி இரண்டு கவர்களில் இருக்கும் கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும் மேலும் மேற்படி கத்தையாக பணம் இருந்த கவரில எவ்வளவு இருந்தது என்று தனக்கு தெரியாது என்று சொன்னதின் பேரில் நான் பணத்தை எண்ணி பார்த்ததில் மூலமாக 18.3 நீளம் x 10.3 அகலம் கொண்ட காக்கி கவரில் இருந்த பணம் எண்ணி பார்த்ததில் அதில் ரூபாய் 50,000/- (82 x 500 = 41,000, 30X200=6,000, 30X 100 = 3,000) இருந்தது. மேற்படி பணம் யாருடையது என்று திரு.கண்ணன் என்பவரிடம் கேட்டபோது அவர் மேற்படி பணம் தன்னுடையது இல்லை என்றும் அதை யார் தன்னிடம் கொடுத்துள்ளார் என்பதும் தனக்கு தெரியவில்லை என்று முன்னுக்கு பின்பு முரணாக சொன்னவுடன் மேற்படி பணம் மற்றும் வைக்கப்பட்டிருந்த காக்கி கவர் வழக்கின் மேல் நடவடிக்கைாக கைப்பற்றப்பட்டது. மேலும் 24.8 நீளம் x 9.8 அகலம் கொண்ட மற்றொரு காக்கி கவரில் எழுதப்பட்டிருந்ததை பற்றி மேற்படி கண்ணனிடம் விசாரணை செய்த போது மேற்படி கவரில் இருக்கும் கையெழுத்து தன்னுடையது இல்லை என்று ஒப்பு கொண்டதையடுத்து மேற்படி கவரில் எழுதப்பட்டிருக்கும் நபர்களை உங்களுக்கு தெரியுமா என்று கேட்டதற்கு அவர் மேற்படி கவரில் எழுதப்பட்டிருக்கும் நபர்களை தெரியும் என்றும் அவர்கள் நேற்றும் (06.07.2026) மற்றும் இன்றும் (07.07.2026) ஆகிய இரண்டு நாட்களில் வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்த ஆவண எழுத்தர்கள் என்று தெரிவித்தார். இந்நிலையில் மேற்படி கண்ணன் என்பவரின் கடையை சோதனை செய்த போது மொத்தம் ரூபாய் 4,74,430/- இருந்தது. அதில் 3,73,930/- தொகைக்கு சரியான மூகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது மீதமுள்ள ரூபாய் 50,500/- (500X 53= 26,500/- , 200X 97= 19,400/-, 100X 46= 4,600/-) சரியான மூகாந்திரம் கூறாததால் அப்பணம் மேற்படி காக்கி கவரில் எழுதப்பட்டிருந்த ஆவண எழுத்தர்களிடமிருந்து சார்

பதிவாளர் (பொறுப்பு) அவருக்காக வசூல் செய்யப்பட்ட கையூட்டு பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் மற்றும் மேற்படி 24.8 நீளம் x 9.8 அகலம் கொண்ட கவரும் வழக்கின் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் சோதனையில் எனது முன்னிலையில் ரூபாய் 1,00,500/- பணம் கைப்பற்றப்பட்டது. திரு.கண்ணன் கைபட எழுதி கொடுத்த கடிதம் இரண்டும் வழக்கின் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து, அரசு ஊழியரான சார் பதிவாளர், வேப்பூர் (i/c) ஈஸ்வரன் மற்றும் அவருக்கு ஆதரவாக செயல்பட்ட திரு.கண்ணன் மற்றும் இதர ஆவண எழுத்தர்களான திரு.தங்கராஜ், திரு.குமார், திரு.சுப்ரமணியன், திரு.தாட்ஸ்மேன் பெருமாள் சம்மந்தபட்ட நபர்கள் ஆகியோர் இணைந்து சட்ட விரோதமாக கையூட்டு தொகைகளை வசூலித்து மறைத்து வைத்திருந்த தொடர்பாக குற்றம் புரிந்துள்ளனர் என்ற நியாயமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட சம்பவம் தொடர்பாக உரிய சட்டபரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து சம்மந்தபட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd(XXXXX) கோ.கோபிநாத், 08/07/2026. Submitted to the Court of the Hon'ble Principal District and Sessions Judge, Perambalur. The report, along with the Surprise Check Mahazar drawn on 07.07.2026 and five accompanying documents, Khakki cover -02, one Khakki cover written in pencil and another one in written in pencil and Blue ball point pen) were received and duly perused. A confidential enquiry was conducted and based on instructions received from the DVAC, a case was registered in Perambalur V&AC, Cr. No.01/2026, u/s 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018), on 08.07.2026 at 18.00 hrs. (Sd.xxxx), 08/07/26, Inspr., V&AC, Perambalur. (V.Ayswarya)

V. Ayswarya 8/7/26
Inspector of Police,
V&AC, Perambalur Establishment.